# தமிழாரம்

ஆரம் 10 மலர் 2

மே 2011



வருக ! புத்தாண்டே வருக !

# மனம் திறந்து சில வார்த்தைகள் ...

அன்புடையீர்,

அனைவருக்கும் எனது இதயம் கனிந்த தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள். கர வருடத்தை கரம் தட்டி வரவேற்போம். புது வருடத்துடன், வசந்தமும் வந்து விட்டது. வசந்தம் வந்தால் அதோடு வரும் உற்சாகமும், புத்துணர்ச்சியும் உங்கள் அனைவரிடமும் ஏற்பட்டிருக்கும் என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை. இப்புத்துணர்ச்சியும் உற்சாகமும் வரும் சங்க நிகழ்ச்சியில் வெளிப்படும் என நம்புகிறேன்.

கடந்த முறை நடந்த பொங்கல் விழா நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற உதவிய அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். நமது சங்க உறுப்பினருக்குள் புதைந்து கிடக்கும் அமோக திறமையை எண்ணி வியக்கிறேன். குறிப்பாக இளைஞர் அணி பங்கேற்ற குறு நாடகம் அம்மாலை நிகழ்ச்சிகளின் முத்தாய்ப்பு. தமிழ்ச்சங்கம், இவர்களின் ஆற்றலை வெளிக்கொணர மேடை அமைத்து கொடுப்பது குறித்து மிகவும் பெருமைப்படுகிறேன். சின்னஞ்சிறார் மற்றும் இளைஞர்கள் மட்டுமன்றி அனைவரும் தாமாகவே முன்வந்து நிகழ்ச்சிகளில் பங்கேற்று தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்வதோடு அனைவரையும் களிப்பில் ஆழ்த்த முன்வருமாறு அழைக்கிறேன்.

குளிர் போய் விட்டது. துளிரும் விட்டாயிற்று. வீட்டில் அடைந்திருந்த காலம் போய், வெளியில் சென்று இயற்கையை சுவாசிக்கும் நேரம் வந்தாயிற்று. சூரியனின் இள வெப்பத்தில் தண்ணீரில் ஆட்டம் போட காசா கொடுக்க வேண்டும்? கொடுத்தால்? இளைஞர் அணியின் நிதி திரட்டும் முயற்ச்சியாக ஏற்ப்பாடு செய்யும் CAR WASH தான் அது. இதற்கான நேரமும் நாளும் மிக விரைவில் அறிவிக்கப்படும். அனைவரும் அதிக அளவில் பங்கேற்று இயற்கையை ஆனந்தமாக அனுபவிப்பதோடு நிதி திரட்டும் முயற்ச்சிக்கு ஆதரவு அளிக்குமாறு வேண்டுகிறேன்.

நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல நமது சங்கத்தின் உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரிக்க உங்கள் அனைவரின் ஒத்துழைப்பையும் நாடுகிறேன். வர இருக்கும் தமிழ் புத்தாண்டு நிகழ்ச்சிக்கு உங்க்கள் நண்பர்களை அழைத்து வாருங்கள். இதுவரை உறுப்பினர் ஆகாதவர்களை உறுப்பினராகப் பதிவு செய்யுங்கள்.

வாழ்த்துக்களுடன்,

பிரபாகரன் சேஷன்.
தலைவர், ஹாரிஸ்பர்க் வட்டார தமிழ் சங்கம்.

## HATS BOARD OF DIRECTORS 2011

General Board of Directors:

Dr. Ray Kathiresan

Mr. Subramanian Muniaswamy

Mr. Sathyamoorthy Krishnamoorthy

| | |
|---|---|
| *President:* | *Mr. Prabakaran Seshan* |
| *Vice President:* | *Mr. Ravi Venkatasubramanian* |
| *Secretary:* | *Mr. Ramkumar Duraiswamy* |
| *Joint Secretary:* | *Mr. Venkatesh Iyer* |
| *Treasurer:* | *Mr. Srinivas Venkatakrishnan* |
| *Joint Treasurer:* | *Mr. Ramanathan Sethuraman* |
| *Communication Director* | *Mrs. Meena Ravi* |
| *Entertainment Director:* | *Mr. Suren Balagopal* |
| *Food Director:* | *Mrs. Padmini Saiganesh* |
| *Youth Director:* | *Mr. Kumar Ganesan* |
| *Communication-Committee:* | *Mrs.Shanmu Marimuthu, Mrs.Anusuya Subramanian* |
| *Entertainment Committee:* | *Mrs.Apsara Madapoosi, Mrs.Krupa Ramesh, Mrs.Subha Rajagopalan* |
| *Youth Committee:* | *Ms.Joyce Abraham, Ms.Sabariah Siraj* |

**HATS TAMIL ACADEMY FIRST YEAR GRADUATION CELEBRATIONS !!!!**

**HATS TAMIL ACADEMY யிலிருந்து தேர்ச்சி பெற்று இரண்டாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் மாணவ மணிகளுக்கு எங்கள் மனம் கனிந்த நல்வாழ்த்துக்கள் !**





# மே 8 .... அன்னையர் தினம்

## தமிழ்ச்சங்க நங்கையருக்கு எமது
## மனம் கனிந்த அன்னையர் தின
## வாழ்த்துக்கள் !



என் அம்மா

என் அம்மா அனுசுயா

என்றும் என்மேல் அன்பு கொண்டவள்

பாடங்கள் பல கற்றுத் தருபவள்

மதிய வேளையில் பள்ளிக்கு வந்து

ஆச்சரியப்படுத்துவாள்

என் அன்றாட விசயங்களை

பகிர்ந்துகொள்ளும் ஒரே ஜீவன்

என் உயிர் அம்மா

கண்டதில்லை அவளைப்போல்

கனிவு மிக்க கடவுளை ! - ஆஷா

**Being a full-time mother is one of the highest salaried jobs... since the payment is pure love.**
***Mildred B. Vermont***

**If the whole world were put into one scale, and my mother in the other, the whole world would kick the beam.**
***Henry Bickersteth***

**Mother – that was the bank where we deposited all our hurts and worries.**
***T. DeWitt Talmage***

**A mother is a person who seeing there are only four pieces of pie for five people, promptly announces she never did care for pie.**
***Tenneva Jordan***

**By and large, mothers and housewives are the only workers who do not have regular time off. They are the great vacationless class.**
***Anne Morrow Lindbergh***

**A mother's arms are made of tenderness and children sleep soundly in them.**
***Victor Hugo***

**The mother's heart is the child's schoolroom.**
***Irish Proverb***

# A Mother's Dictionary

**Bottle feeding:** An opportunity for Daddy to get up at 2 am too.

**Defense:** What you'd better have around de yard if you're going to let the children play outside.

**Drooling:** How teething babies wash their chins.

**Dumbwaiter:** One who asks if the kids would care to order dessert.

**Feedback:** The inevitable result when the baby doesn't appreciate the strained carrots.

**Full name:** What you call your child when you're mad at him.

**Grandparents:** The people who think your children are wonderful even though they're sure you're not raising them right.

**Hearsay:** What toddlers do when anyone mutters a dirty word.

**Independent:** How we want our children to be as long as they do everything we say.

**Look out:** What it's too late for your child to do by the time you scream it.

**Puddle:** A small body of water that draws other small bodies wearing dry shoes into it.

**Show off:** A child who is more talented than yours.

**Storeroom:** The distance required between the supermarket aisles so that children in shopping carts can't quite reach anything.

**Temper tantrums:** What you should keep to a minimum so as to not upset the children.

**Top bunk:** Where you should never put a child wearing Superman jammies.

**Two-minute warning:** When the baby's face turns red and she begins to make those familiar grunting noises.

**Whodunit:** None of the kids that live in your house.

**Whoops:** An exclamation that translates roughly into "get a sponge."



## கவிதை கேளுங்கள்.....

ஆடும் போதும் பேதமில்லா தமிழ் அதிர வேண்டும்
ஓடும் குருதியாவும் செந்தமிழ் உணர வேண்டும்
அடவும் நடவும் எதுவும் தமிழ் படவே வேணும்
பாட்டும் கூத்துமினி தனித்தமிழ் நடத்த வேணும்
அடடா மேளம் எடுடா தமிழ் அறைய வேண்டும்
ஏட்டில் எழுத்தில் மின்னும் தமிழ் ஒளிர காணும்
வீட்டில் பேச்சில் தமிழ் மூச்சுவிட - வாடும்
உள்ளமெல்லாம் தமிழ் - தமிழ் மொழிய -
நாளும்
தமிழில் அறிவு பெற வேண்டும்
தமிழர் துணிவு பெறல் வேண்டும்
வாழும் தலைமுறைக்கும் வழிகோலும்
நாடும் - தனி தமிழ்மொழிக்கு நாடும்.
நாளும் அதற்கு உழைப்பீன வேணும்.
தின்னும் சாப்பாடு நமக்கு ஆங்கிலத்தில் வேகும்
கனித்தமிழாம் தனிதமிழில் எல்லாமும் ஆகும்
மொழியடிமை நீங்க - நீங்க தமிழ் முழங்க வேண்டும்.
தோண்ட தோண்ட ஊறும் தமிழ் எட்டு திசை சேரும்
மூவேந்தர் ஆண்ட தமிழ் ஆள வர வேண்டும்
ஏமாந்தம் இல்லை இதில் தெளிவு பெற கூடும்.

**- திரு. பன்னீர்செல்வம்**

# தமிழ் நன்னெறி நடப்போம் வாரீர் !

தாய் மொழி தமிழ் நமக்கு
முதலானவள்
அகம் புறம் வாழ்க்கையில
இரண்டானவள்
முப்பால் தந்த தமிழ் தாயானவள்
நன்னெறி நடக்குங்கால்
நாலடியானவள்
நான்மணிக்கடிகை தமிழ்
அணியானவள்
ஐம்பெரும் காப்பியம்
விதைப்பால் தமிழ்
ஆறாம்திணை அறம் அளிப்பாள்
தமிழ்
ஏழிசை யாழ் தமிழ்
இனிப்பானவள்- எண்
திசை தொகை எட்டால்
வென்றால் தமிழ்
நவமணி இருபெருக்கு அணியும்
தமிழ்

---

குடிக்க பாட்டில் வாட்டர்
தண்ணீரில்லை
குளிக்க வாட்டர் ஹீட்டர்
வெந்நீரில்லை
விசில் அடிக்க பிரஷர் குக்கர்
அடுப்பில்லை
பஞ்சர் ஆனது கார்
பழுதான வண்டியில்லை
தந்த டாடி சுத்த வேஸ்ட்
பெற்றான் அப்பன் சரியில்லை !

ஆட்டுக்கல் உரலுமில்லை
அரைக்கும் கை அம்மியில்லை
அதனால் தான் அவள் அம்மா
இல்லை மம்மி?
இதழுக்கு லிப்ஸ்டிக் - பூசாந்து
நுதலுக்கு ஸ்டிக்கர் - ஒட்டு பொட்டு
போறது பிகர் - பெண்ணில்லை
மச்சி அது டக்கர் - அழகில்லை.
கை செல்லில் பேசும் கால்
தமிழா!
இழந்தாய் தலை
முறை இல்லை !
பிள்ளைக்கு தமிழ்
சொல்லாமல்
தலைமுறை
இழந்தாய்
பேரன் பெரும்
பேர் அரண்
இல்லை உனக்கு
அந்நியன் ஆனாய் -
நீ
தமிழ் சொல்லாமல்
வைத்தாய்
உறவுக்கு
உன்
கொள்ளி!

- திரு. பன்னீர்செல்வம்

## வந்ததே ! வந்ததே! வசந்தம் வந்ததே!




ஆஷா சுப்பிரமணியன்



மேதா சுந்தர்




## பிஞ்சுக் கரங்களில் வசந்தத்தின் வண்ணங்கள்

# Koala Bears

Written and Illustrated by: Neha Swaminathan



**Koalas have wooly dark fur with brown and white patches and a cream belly. It also has a broad head, small eyes, large furry ears, an oval shaped black nose, and they have sharp claws. They are mammals and marsupials. The female Koala has a pouch just like a Kanga-roo. A female Koala's average size is 72 cm and a male Koalas average size is78 cm.**

Continues ... . . .

**Koala bears live in Australia. They are picky eaters and eat 2.5 pounds of Eucalyptus leaves every day. They also drink liquids from the leaves. One meal gives Koala bears all the food and liquids it need for the day. Koalas are good climbers and can also move very quickly on both legs and hands.**

**Do you know Koalas aren't bears? Well, they aren't and they are only called koala bears because they resemble teddy bears. Koalas sleep at least 19 hours a day. Their predators are the European Fox. Koala's used to be a food source for the Native Americans, but now no human eats them. Koalas are also endangered because they are dying from a disease. In Australia, Koalas are protected because whenever someone gets caught for killing them, they get severely punished. They are in the Phascolarctidae family. Joeys are baby koalas that weigh less than a gram. Joeys are about an inch when they are just born. Koalas have 2 thumbs and 3 fingers on each hand and foot. The average life of a Koala bear is 18 years.**

**I hope you had fun time learning about Koala Bears!**

# தனியா தன்னந்தனியா...

மீனா ரவி

எங்களுக்கு கல்யாணமான புதிது. நானும் இவரும் சென்னையிலேயே வேலை பார்த்து வந்ததால் பத்து நாளிலேயே தனிக்குடித்தனம் வைத்து விட்டு மாமனாரும் மாமியாரும் ஊரைப்பார்க்கக் கிளம்பியாயிற்று. அம்மா வீட்டில் சமையல் கற்றிருந்த பெருமையில் நான் திருமணப் பரிசாக வந்திருந்த ஹாட் பேக்கில் எதையோ சமைத்து அடைத்துக் கொடுக்க இவரும் நாள் தவறாது அதை வண்டியில் மாட்டிக் கொண்டு போக, எல்லாம் ஒரு மாதம் வரை நன்றாகத்தானிருந்தது.

அன்று வெள்ளிக் கிழமை. காலை ஷிப்டில் அலுவலகத்திலிருந்த எனக்கு என் சித்தப்பாவிடமிருந்து போன். சென்னையிலேயே இருக்கும் அவருக்கு திடீரென்று நாங்கள் குடித்தனம் நடத்தும் அழகைப் பார்க்க ஒரு விபரீத ஆசை! விதி யாரை விட்டது? ஒரு ஆறுமணி வாக்கில் வருவதாக சொன்ன அவர் வாக்கை வேதவாக்காக எண்ணி அரக்கப் பரக்க என் மேலாளரிடம் ஓடினேன். மேல் மூச்சும் கீழ் மூச்சும் வாங்க கை கால்களை ஆட்டி பலத்த அபிநயங்களுடன் நான் விஷயத்தை சொல்ல அவரோ ஒன்றுமே நடவாதது போல் “அவ்வளவு தானே? பேசாம ஒரு வெண்பொங்கல் கொத்சு செஞ்சு, கொஞ்சம் கேசரி பண்ணிடு. ரொம்ப சுளுவா வேலை ஆய்டும்” என்று மேலே நடந்தார்.

அவருக்கென்ன முப்பதாண்டுகால சமையல் அனுபவம். எனக்குத்தான் சர்வாங்கமும் நடுங்கிப் போயிற்று. மறுபடியும் தொலைபேசியின் மேல் பாய்ந்தேன்.

“என்னங்க, எங்க சித்தப்பா சாயங்காலம் நம்ம வீட்டுக்கு வர்றாராம்!” என்றதுதான் தாமதம், என் சூரப்புலி என்னைவிட ஒருபடி மேலே போய், “அப்டியா? நான் அரை நாள் லீவ் போட்டுட்டு வந்தர்றேன். ஏதாவது சாமான் வேணும்னா லிஸ்ட் போட்டு வை” என்றார்.

மளிகை சாமான் டப்பாக்களை வற்றாத அமுத சுரபிகளாக எண்ணி வந்த என் மடத்தனம் புரிபட, ஷிப்ட் முடிந்ததும் முண்டியடித்து முதல் ரயிலைப்பிடித்து வீட்டுக்கு ஓடினேன். என்னவர் வாயில் கிலோக்கணக்கில் சர்க்கரையைத்தான் கொட்ட வேண்டும் (ஆனால் டப்பாவில் ஒரு ஸ்பூன் சர்க்கரைதான் மிச்சம்!!). எல்லா சாமான்களுமே அதள பாதாளத்தில் காட்சியளித்தன!

உடனே ஒரு பேப்பரையும் பேனாவையும் வாளைப்போல உருவி, பட்டியலிடத் தயாரானேன்...

ஹ்ம்..வேகமிருந்து என்ன?... விவேகம் இல்லையே? உளுந்து என்று எழுதியாயிற்று... ஆனால் எவ்வளவு தேவை என்று தெரியவில்லை! (வெண்பொங்கல் செய்ய உளுந்து எதற்கு என்று நீங்கள் கேட்பது தெரிகிறது. ஆனால் எனக்குத் தெரிந்தால் தானே?) கண்களை இடுக்கி யோசித்தேன். ".ஹ்ம்.. எதற்கும் கொஞ்சம் கூடவே வாங்கி வைப்போம். மறுபடி இந்த மாதிரி அவஸ்தைப் பட வேண்டாம்" -ன்று முடிவு செய்து 5 கிலோ என்று எழுதினேன்!! இப்போது வாசகர்களாகிய உங்களுக்கே புரிந்திருக்கும் இந்த மளிகை லிஸ்டின் லட்சணம்!

என் படாடோபமான பட்டியல் முடியவும், வாசலில் படபட வென்ற சத்தத்துடன் இவர் வண்டி வந்து நிற்கவும் சரியாக இருந்தது. சமயோசிதமாக தான் வாங்கி வந்த "சமைத்துப் பார்" புத்தகத்தை என் கையில் திணித்துவிட்டு, லிஸ்டைப் பறித்துக் கொண்டு பக்கத்திலிருந்த மளிகைக் கடைக்கு பாய்ந்தார்.

அரை மணியாயிற்று... ஒரு மணியாயிற்று.. மனுஷரைக்காணோம். மீனாட்சியம்மாளின்** புண்ணியத்தில் கூட்டுமில்லாமல் சாம்பாருமில்லாமல் மையமாக எதையோ கொதிக்க வைத்துவிட்டு என் இஷ்ட தெய்வங்களையெல்லாம் அதை கொத்சாக மாற்றும்படி மனசுக்குள் மன்றாடிக் கொண்டே வெளி சன்னலில் பார்வையைப் பதித்திருந்தேன் நான்.

திடீரென தெருவில் போவோர் வருவோரெல்லாம் ஒரே திசையில் பார்ப்பதை உணர்ந்து கூர்ந்து பார்த்தால்.. இவர்!! இடது கையில் ஆளுயரக் கூம்பு வடிவக் காகிதப் பொட்டலத்துடன், வலது கையிலிருந்த பையைச் சற்று தள்ளிப் பிடித்தபடி, நாட்டியப் பேரொளிகள் வியந்து நோக்கும் லாகவத்துடன் வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தார். அரண்டுபோய், மாடிப்படிகளை நான்கு நான்காகத் தாண்டி ஓடினேன். நான் பயந்த படியே ஆயிற்று! வீட்டு வாசலில் எங்கள் வாடகை வீட்டின் சொந்தக்காரம்மாள்! என் மாமியாரைவிட அந்தம்மாளிடம் எனக்கு பயம் அதிகம்!

இவர் வீட்டு வாசலை வந்து அடைந்தாரோ இல்லையோ "என்னதிது?" என்று ஆளுயரப் பொட்டலத்தைக் காட்டி கர்ஜித்தார் அந்த அம்மாள்.

இவர் "இது வர மிளகாய்.." என்று பெருமையாக உரைத்தார். "ஏன்? உன் பெண்டாட்டி கல்யாணத்துக்கு சமைக்க காண்ட்ரக்ட் எடுத்திருக்காளா?"

இவரும் சளைக்காமல், “அட அதான் கடைக்காரர் இவ்வளவும் வீட்டுக்கா சார்?னு கேட்டுகிட்டே இருந்தானா?. நீங்க போங்க சார். இவ்வளவு சாமானும் கட்ட நேரமாவும்னான். நாந்தான் இருந்து கையோட வாங்கிட்டு வந்தேன்” என்றார் பெருமை பொங்க!

“அது சரி! அந்தக் கையை ஏன் அப்பிடி தள்ளி பிடிச்சுகிட்டு நிக்கறே?” என்று என் மனதிலிருந்த கேள்வியையே கேட்டார் அந்த அம்மையார்.

“ஓ! இதுவா? இவதான் லிஸ்ட்ல தனியா - ன்னு எழுதி அதுக்கு கீழ சில சாமானெல்லாம் எழுதியிருந்தாள். அதுதான் எதுக்கோன்னு தனியா பிடிச்சுகிட்டு வந்தேன்.” என்றாரே பார்க்கவேண்டும்!

இதேதடா வம்பு என்று லிஸ்டைப் பிடுங்கிப் பார்த்த எனக்கு சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை! தனியா என்று நான் குறிப்பிட்டிருந்தது உலர்ந்த கொத்துமல்லி விதைகளை..... இவர் அதைப் புரிந்து கொண்ட விதமோ......

ஒரு வழியாக இருவரும் மாறி மாறி விஷயத்தைச் சொல்லி முடிக்க, முதன் முறையாக அந்த அம்மாள் பக பக வென சிரிக்க ஆரம்பித்தார். அந்த சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் நாங்கள் இருவரும் நைசாக மாடிக்கு நழுவினோம்.

இருவரும் தனியாகத்தானிருக்கிறோம் என்று உறுதிப்படுத்திக் கொண்டு இவர் மெதுவாக, “மளிகை சாமானுக்கு மாசம் எவ்வளவு ஆகும்னு உனக்கு ஏதாவது ஐடியா இருக்கா?” என்றார். “தெரியலியே. எங்க வீட்டுல அஞ்சு பேர். சுமார் ஐந்நூறு ரூபா ஆகும்” என்றேன். இவரும், “எங்க வீட்லயும் கிட்டத்தட்ட அதேதான் ஆகும். ஆனா இன்னிக்கு பில் ரெண்டாயிரத்து முந்நூறு வந்திருக்கே?” என்றார் குழப்பமாக.

எனக்கு தலையைச் சுற்றியது. அது என் ஒருமாத சம்பளம்!!!

“நான் இன்னும் மீதி சாமானெல்லாம் கொண்டு வரணும். கையில பணம் பத்தாது போல இருந்தது. அதான் வீட்டுல இதையெல்லாம் வெச்சிட்டு வர்றேன்னு சொல்லிட்டு வந்தேன்” என்றார் கவலையாக.

கீழே வீட்டுக்காரம்மாள் யாரிடமோ உரத்த குரலில் நாங்கள் மாதாந்திர மளிகை வாங்கிய புராணத்தைப் பறைசற்றிக்கொண்டிருக்க, நாங்கள் இருவரும் செய்வது அறியாமல் உட்கார்ந்திருந்தோம்! வெட்ட வெளிச்சமாகத் தெரிந்தது நான் போட்ட லிஸ்ட் கண்டிப்பாக ஒரு வீட்டுக்கோ அல்லது ஒரு மாதத்திற்கோ தேவையானது அல்ல என்று!

அந்த நாட்களில் இப்போதுபோல க்ரெடிட் கார்டுகளோ, வேண்டாமென்றால்

திருப்பிக் கொடுத்தால் வாங்கிக்கொள்ளும் “ரிட்டர்ன் பாலிசி”-யோ கிடையாது. இரண்டாயிரம் ரூபாய் மளிகை சாமான்களை வைத்துக்கொண்டு என்ன செய்வது? மளிகை பில் எப்படி கட்டுவது? இருவரும் அழமாட்டாக்குறையாக அமர்ந்திருக்க, வீட்டுக்கார அம்மாள் தன் கணவருடன் மாடிப்படியேறி வந்தார்.

“சரி, சரி இந்த மளிகைக் கடையை என்ன செய்யறதா உத்தேசம்?”

“தெரியலை ஆன் டி...” என்று கோரஸாக இழுத்தோம் நாங்கள். “இதோ அங்கிளோட போய், அந்த மளிகைக் கடை முதலாளியைப் பாருங்க.....ம் ..சீக்கிரம்” என்று விரட்டினார்.

“என்ன இந்த சித்தப்பாவை இன்னமும் காணோமே” என்று எண்ணியவாறே இவருடன் சென்றேன்.

கடைக்காரரர் எங்கள் வீட்டின் சொந்தக்காரரர் சொன்னதை கேட்டபின், அவர் பின்னால் ஒளிந்திருந்த எங்களை எட்டிப் பார்த்தார். பின் ஏதோ கோமாளிகளைக் கண்டுவிட்டவர் போல உரக்கச் சிரித்து “ஓ உங்க வீட்டு மாடில குடித்தனம் வந்த புதுசா கலியாணமான சோடிங்களா? என்னம்மா போன வாரம் எங்க மருமகளுக்கு புதுக்கோட்டைக்கு ரிசர்வேஷன் பண்ணிக் குடுத்தீங்களே, நெனவிருக்குதா?” என்றார்.

“ஓ அவங்க உங்க மருமகளா? எனக்கு அது தெரியாது” என்றேன் அசடுவழிய. இவரோ இது எதையுமே பொருட்படுத்தாது, அங்கே கடைப்பையன் கட்டிவைத்திருந்த மெகா சைஸ் பொட்டலங்களையே மந்திரித்து விட்டதுபோல் பார்த்துக் கொண்டு நின்றார்.

கடை முதலாளி மீண்டும் சிரித்து “தம்பி, பயப்படாதீங்க! சாமானெல்லாம் நாங்க திருப்பி எடுத்துக்கறம். இனிமேக்கொண்டு பெரியவங்களக் கேட்டு லிஸ்டு எளுதிக்கிட்டு வாங்க” என்று தன் பங்குக்கு அறிவுரை கூறி அனுப்பினார்.

தப்பித்தோம் பிழைத்தோம் என்று வீட்டுக்கு வந்த பிறகுதான் சித்தப்பாவை சுத்தமாக மறந்துபோனது நினைவிற்கு வந்தது! “அடக்கடவுளே! வெறும் கொத்சுவை வைத்துக்கொண்டு என்ன செய்வது என கையைப் பிசைந்து கொண்டு நிற்கவும் அவர் உள்ளே வரவும் சரியாக இருந்தது.

“என்ன? மளிகை பிரச்சினையெல்லாம் தீர்ந்ததா?” என்று பொங்கி வந்த சிரிப்பை அடக்கியபடியே அவர் உள்ளே வர, இது பின்னோடு வந்த வீட்டுக்காரம்மாளின் கைங்கர்யம் என்று சொல்லாமலே புரிந்தது.

“இந்தா, இந்தப் பையை உள்ளே வை என்று” சித்தப்பா கொடுத்த பைக்குள் வசந்த பவனிலிருந்து சுடச்சுட பலகாரங்களும், பூவும், பழங்களும் என்னை நிம்மதிப் பெருமூச்சு விட வைத்தன.

---

**சமைத்துப் பார் புத்தகத்தின் ஆசிரியை

# சுவை அரும்புகள்..



## Mango Pachadi Recipe

### Ingredients needed

Raw mango -1 1/4 cup (1 cup heaped and another 1/4 cup). Use tangy mango.
Jaggery -1 cup

Neem flowers -1 1/2 tsp

### For the seasoning

Oil -1 tsp
Mustard -1/2 tsp
Red chilli -1
Green chilli -1 (cut it into 2 and slit it)

### Preparation

Scrap the skin of the mangoes slightly. No need to take the skin fully. Chop it into medium size pieces. (Or you can leave a little skin on it for texture)

Heat jaggery in 1/4 cup of water and filter it to remove any impurities.

### Method

Cook the mango pieces in a little water till soft. It should not be mushy, so do not over cook it.

Boil the filtered jaggery for a few minutes, then add the cooked mango and boil till it becomes a little thick.

Heat a tsp of oil, add mustard seeds, when mustard splutters, add red chilli, green chilli and add it to the pachadi.

Delicious mango pachadi can be served like this.

## ஹாரிஸ்பர்க் வட்டார உணவகங்கள்.... ஓர் அறிமுகம்



**Looking for a special place to take her for mothers day lunch or dinner? Look no further !**

**BOMBAY JUNCTION WELCOMES YOU !**

## Restaurant Hours

| | |
|---|---|
| Monday | Closed |
| Tuesday | 11:30 AM - 10:00 PM |
| Wednesday | 11:30 AM - 10:00 PM |
| Thursday | 11:30 AM - 10:00 PM |
| Friday | 11:30 AM - 10:30 PM |
| Saturday | 11:30 AM - 10:30 PM |
| Sunday | 11:30 AM - 10:00 PM |

Situated in the heart of Mechanicsburg (Carlisle Pike), you will find BombayJunction (formerly called Pizza Buffet). A combination of American dish and Indian dishes. Enjoy authentic South Indian, Hyderabad, North Indian and the best American fast food (Pizza).

**Bombay Junction * 6499 Carlisle Pike * Mechanicsburg, PA * USA * 17055 ***
**Phone: (717) 697-4282 * Fax: (717) 697-4741**
© 2011 Bombay Junction. All rights reserved.

# ரூம் போட்டு யோசிப்பாய்ங்களோ...!

## தத்துவம்

- இட்லி மாவை வெச்சி இட்லி போடலாம்–
  சப்பாத்தி மாவை வெச்சி சப்பாத்தி போடலாம் - ஆனா
  கடலை மாவை வெச்சி கடலை போட முடியுமா?
- பஸ் ஸ்டாப் கிட்ட நின்னா பஸ் வரும்.
  புல் ஸ்டாப் கிட்ட நின்னா புல் வருமா?

- பஸ் ஸ்டாண்டிலே பஸ் நிக்கும்
  ஆட்டோ ஸ்டாண்டிலே ஆட்டோ நிக்கும்
  சைக்கிள் ஸ்டாண்டிலே சைக்கிள் நிக்கும்
  கொசுவத்தி ஸ்டாண்டிலே கொசு நிக்குமா?

- இஞ்சினீரிங் காலேஜ்ல படிச்சா இஞ்சினீயர் ஆகலாம்–
  பிரெசிடென்ஸி காலேஜ்ல படிச்சா ப்ரெசிடெண்ட் ஆக முடியுமா?
- தூக்க மாத்திரை சாப்பிட்டா தூக்கம் வரும்.
  இருமல் மாத்திரை சாப்பிட்டா இருமல் வராது
  ( என்ன கொடுமை சார் இது?)
- பல்வலி வந்தால் பல்லைப் புடுங்கலாம் - ஆனா தலைவலி வந்தால்
  தலையைப் புடுங்க முடியுமா?
  (ஐயோ ! ஐயோ ! காப்பாத்துங்க!)
- டி . நகர் போனா டீ வாங்கலாம் - விருதுநகர் போனா விருது வாங்க முடியுமா?
- என்னதான் பெரிய வீரனா இருந்தாலும், வெய்யில் அடிச்சா திருப்பி அடிக்க முடியாது
- கொலுசு போட்டா சத்தம் வரும். சத்தம் போட்டா கொலுசு வருமா?
- பில் கேட்ஸோட பையனா இருந்தாலும், கழித்தல் கணக்கு போடும்போது கடன் வாங்கித்தான் ஆகணும்... (இதுகுன்னே கௌம்பி வாராய்ங்களா??)